# இலங்கையின் இறைமையை பிறிதொரு நாடு அல்லது பிறிதொரு அரசாங்கம் பகிர்ந்து கொள்ள முடியாது



BKT 0158
26/08/2023
PRESIDENTIAL SECRETARIAT
LIBRARY

# மகியங்கனையில் கம்உதாவ 89 ஆண்டு நிறைவு விழாவில் பரிசில்கள் வழங்கும் வைபவத்தில் அதிமேதகு சனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் ஆற்றிய உரை — 03.07.1989

கம்உதாவ ஜயந்தியின் பரிசில்கள் வழங்கும் இந்த வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு எங்களை அழைத்தமைக்கு உங்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். நாங்கள் ஆண்டு தோறும் கம்உதாவ ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடி வருகின்றோம். இது பதினோராவது ஜயந்தியாகும். நீங்கள் அனைவரினதும் மனப்பூர்வமான ஒத்துழைப்புக் காரணமாகத்தான் ஊவா மாகாணத்தை மையமாகக் கொண்ட மகியங்கனையில் கம்உதாவ ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாட முடிந்தது. கபினற் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைகளைச் சேர்ந்த பிரதான அமைச்சர்கள், மாகாண சபை அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரும், கிராமோதய சபைகள், பிரதேச சபைகள், மாநகர சபைகள், பட்டின சபைகள் ஆகியவற்றிற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களும் எங்கள் பணிக்கு அயராது ஒத்துழைத்தார்கள். இவர்களைப் போன்று அரச உத்தியோகத்தர்களும், திணைக்கள உத்தியோகத்தர்களும், தனியார் துறையினர்களும், முப்படைகளும், பொலிசாரும், தொண்டர் இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் இந்த ஆண்டு நிறைவு விழாவின் வெற்றிக்காகப் பலவாறு உதவியளித்துள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் எனதுளங் கனிந்த நன்றியறிதலைத் தெரிவிக்கின்றேன்.

இந்த ஆண்டு நிறைவு விழாவின் வெற்றிக்காக நமது பொதுமக்கள் தங்கள் உயிரையும் மதிக்காது தியாக சிந்தனையுடன் ஒத்துழைத்தமையை விசேடமாகக் குறிப்பிட விரும்புகின்றேன். அவர்கள் பல இன்னல்களுக்கிடையே — குறிப்பாகப் போக்குவரத்து வசதியின்மைக்கிடையில் — இலட்சக் கணக்கில் மகியங்கனைக்கு வந்து கம்உதாவ பதினோராவது ஜயந்தியில் கலந்து கொண்டார்கள். இன்று

முன்னெப்பொழுதும் கண்டிராதவாறு மாபெரும் சனக் கூட்டம் இப்புனித பூமியில் திரண்டிருக்கின்றது. நான் இன்று வரும்போது மிக நீண்ட வரிசைகளில் இவ்விழாவினைக் காண்பதற்காக பெருந்திரளான மக்கள் போட்டாபோட்டியாக நின்று கொண்டிருப்பதை காணலுற்றேன். மகா சங்கத்தினர், ஏனைய மதப் பெரியார்கள், பாடசாலை மாணவ, மாணவிகள் ஆகியோரைத் தவிர்ந்த அனைவரும் ஐந்து ரூபா கட்டணத்தைச் செலுத்தித்தான் இந்த விழாவினைப் பார்க்க வருகிறார்கள். மிகுந்த வறுமையினால் பீடிக்கப்பட்டவர்களும் ரூபா ஐந்து கட்டணத்தைச் செலுத்தித்தான் இந்தக் கண்காட்சி வளவில் நுழைகிறார்கள். அவர்கள் மைல் கணக்காக நடந்து வருகிறார்கள். டிராக்டர்கள், மிதிவண்டிகள், றேரல்வண்டிகள், லொறிவண்டிகள், வான்வண்டிகள் ஆகிய வாகனங்களில் ஏறி பெரும் பணச்செலவில் இக்கண்காட்சியைக் காணவருகிறார்கள். கடந்த பத்து நாட்களில் அவர்களோடு கலந்துரையாடும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அதே போன்று அந்த மக்களுடன் உரையாடியவர்களோடும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதையும் அவர்களுடைய அபிப்பிராயங்கள் யாதென்பதையும் நான் அறிந்து கொண்டேன். பொதுமக்களின் அபிப்பிராய பேதங்களை அறிந்து கொள்வதற்காக ஆண்டு தோறும் நான் இந்த — கம்உதாவ ஆண்டு நிறைவுவிழாக்களைப் பயன்படுத்திக் கொண்டுள்ளேன்.

கடந்த வருடத்தில் ஆனைமடுவில் நான் அறிந்து கொண்டவற்றை அந்த ஆண்டின் யூலை மாதம் 3 ஆம் திகதியன்று ஆனைமடுவ கம்உதாவ உற்சவத்தில் நமது முன்னாள் சனாதிபதி அவர்களது முன்னிலையில் நான் எடுத்துரைத்தேன். அத்தருணத்தில் விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் பொதுமக்களது முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதை நான் உங்களுக்குக் கூறினேன். நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க இன்று விஞ்ஞானிகளும் தொழில் நுட்பவல்லுனர்களும் ஏழை எளிய மக்களுக்கு விஞ்ஞானத்தினாலும், தொழில் நுட்பத்தினாலும் மிகுந்த பயன் ஏற்படும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்துள்ளமையை இக்கண்காட்சிக்கு வந்த நீங்கள் கண்டிருக்கலாம். கடந்த ஆண்டில் நான் பேசியபோது உணவு முத்திரைகளின் மூலம் பிழைப்பவர்களுக்கு குறைந்தது ரூபா 2,500 வீதம் மாதாந்தம் இரண்டு ஆண்டுகள்வரை பணவுதவிகளை அளித்து அந்த மக்களுக்கு சக்தி ஊட்ட வேண்டுமென்பதைக் குறிப்பிட்டேன்.

எவரிடமும் கையை நீட்டாமல் பிழைக்கக் கூடிய ஆற்றலை அம்மக்களுக்கு வழங்கவேண்டுமென்பதையும் குறிப்பிட்டேன். இந்த எண்ணங்களுக்குச் செயலுருக்கொடுக்கும் வாய்ப்பு இப்பொழுது கிட்டியுள்ளது.

மேற்போன்ற எண்ணங்களை நம் நாட்டுப் பொதுமக்கள்தான் நமக்குத் தெரிவித்திருந்தார்கள். பொதுமக்களின் கருத்து என்னவென்பதை அறியவேண்டுமானல் இத்தகைய வைபவங்களுக்கு வருகை தந்து பொதுமக்களிடமே கேட்டறிதல் வேண்டும். உண்மையான பொதுமக்கள் கருத்துக்கு இத்தகைய விழாக்கள் உரைகல்லாக அமைகின்றன. இவற்றின் மூலம்தான் பொதுமக்களுடைய அபிப்பிராயம் என்னவென்பதை அறியமுடியும். பணம் படைத்தவர்களும், செல்வந்தர்களும் வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று தடவை வெளிநாட்டில் பயணம் செய்பவர்களும் அந்த வெளிநாடுகளில் இடம்பெறும் சர்வதேச பொருட் காட்சிகளைப் பார்வையிடும் புண்ணியவான்களும் அந்த நற்பேறு இறைவன் திருவருளால் தங்களுக்கே கிடைத்த சிறப்புரிமையாகக் கருதி வந்தார்கள். அமெரிக்காவிலோ யப்பான் நாட்டிலோ காட்டப்படும் திஸ்னிலாந்துக் காட்சிகளைக் கண்டு களிக்கும் செல்வம் படைத்தவர்கள், நாங்கள் கிராமங்கள் தோறும் வெளிநாட்டுச் செலவாணிச் செலவேதுமின்றியே ஏழை எளிய மக்கள் கண்டு களிக்கும் வகையில் கம்உதாவ பொருட் காட்சிகளை ஒழுங்கு செய்வதைச் சகிக்கமாட்டார்கள். அவர்களுக்கு ஏற்படும் பொருமை வியப்புக்குரியதன்று. ஆயினும் இக் கம்உதாவ ஜயந்தியைக் கிராமங்கள் தோறும் இங்ஙனம் கொண்டாடப்படுவதன் காரணமாகக் கிராம மக்களின் வறுமையினை ஒழிப்பதற்கு, நல்குரவினை நீக்குவதற்கு, அம்மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, வருமான வழிகளையேற்படுத்திக் கொள்வதற்கு, எத்தகைய அறிவும், எத்தகைய பயிற்சியும், எத்தகைய இன்பமும் பெறுதல் இயலுமென்பதை இந்த ஏழை வறிய மக்களோடு அளவளாவியவிடத்து நான் அறிந்து கொண்டேன்.

ஐந்து ரூபா கட்டணத்தைச் செலுத்தி மைல் கணக்காக நடந்து வந்து பயமுறுத்தல்கள் பலவற்றிற்கிடையில் இவர்கள் பெறும் இன்பநுகர்ச்சி எப்பேர்ப்பட்டதென்பதை அந்த ஏழை எளிய மக்களிடம் விசாரித்து அறியலாம். கணக்கிலடங்காத பெருந் திரளான மக்கள் பகல்

இரண்டு மணி முதல் நடுநிசி 12 மணிவரை நாள்தோறும் இப்பொருட் காட்சியைக் கண்டு களிக்க வந்தார்கள். கம்உதாவ பொருட் காட்சியைப் பார்க்கப்போனல் கிராமத்திற்கு திரும்பிவர முடியாதென்றும், சாவதற்கு ஆயத்தமாக இருங்கள் என்றும் ஊரெங்கும் கடிதங்கள் வினியோகிக்கப்பட்டிருந்தன என்றும், கிராமங்களில் இருந்த மோட்டார் வண்டிகளின் உரிமையாளர்களை அச்சுறுத்தியிருந்தார்களென்றும் நான் விசாரித்த சிலர் எனக்குக் கூறினர்கள். கம்உதாவ விழாவினைப் பார்க்கப்போனல், கம்உதாவ விழாவிற்குப் பொதுமக்களை ஏற்றிச் சென்றால் இன்ன, இன்ன ஊறுகளைச் செய்வோமென அறிவிப்புகள் விடப்பட்டிருந்தன. அத்தகைய பயமுறுத்தல்களை அசட்டை செய்துதான் இந்த இலட்சக் கணக்கான பொதுமக்கள் இங்கு வந்துள்ளார்கள். இத்தகைய அச்சுறுத்தல்களுக்கிடையில் பெருஞ் செலவில் சிரமப்பட்டு இங்கு வருவதற்கு காரணம் யாதென நான் ஒருவரிடம் கேட்டேன். அவர் அளித்த பதில் மிகமுக்கியமானதாகும். நாம் இழக்க நேரிடக்கூடிய ஒரே ஒரு பொருள்தான் உண்டு. அது எங்கள் உயிராகும். அது எந்த இடத்திலோ, எந்த நாளிலோ இழக்கக் கூடியதொரு பொருள். கம்உதாவ கண்காட்சியைக் கண்டுகளித்து அதனை இழக்க நேரிட்டாலும் பரவாயில்லையென நினைத்தவாறே நாங்கள் இங்கு வந்து சேர்ந்தோம். இவர்கள் அனைவரும் ஏழை எளிய மக்களாவர். துணையேதுமில்லாதவர்களாவர். ஆதலால் சகோதர, சகோதரிகளே, அந்த ஏழை எளிய மக்களுக்கு நமது உளம் கனிந்த அன்பினைக் காட்ட விரும்புகிறேம்.

இந்த ஆண்டுக்குரிய கம்உதாவ ஜயந்தியை ஒழுங்கு செய்வதற்கு வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் கடந்த மார்ச்சு மாதத்தில்தான் ஆரம்பித்தார். அதற்கு முன்னர் 88 ஆம் ஆண்டு ஒகஸ்த்து மாதம் 1 ம் திகதியன்று முதல் மண்பிடியை இந்த இடத்தில் வெட்டியபோது பல பேருக்கு பலத்த ஐயம் ஏற்பட்டிருந்ததென்பதை உங்களுடைய பிரதான அமைச்சர் பேர்ஸி சமரவீர அவர்கள் கூறினர்கள். அதனைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் இங்ஙனம் மண்பிடியை வெட்டினலும் கம்உதாவ விழாவினைக் கொண்டாடும் வாய்ப்பு இவர்களுக்குக் கிடைக்குமாவென்று கேட்டிருந்தார்கள். பலர் பலவாறு ஐயமுற்றிருந்தார்கள். இவர்கள் இந்தக் கட்டிடங்களை எழுப்பினலும் அவற்றைப் பகிர்ந்தளிப்பவர்கள் நாங்களே யென்றும் சிலர் கூறினர்களென்று உங்களுடைய பாராளுமன்ற உறுப்பினரும்

இராஜாங்க அமைச்சருமான லக்ஷ்மன் செனவிரெட்ண அவர்கள் எனக்குக் கூறினர்கள். இத்தகைய பலத்த ஐயங்களுக்கிடையிலும் நாங்கள் பின்வாங்க மறுத்துவிட்டோம். யாவரும் பயனடையக்கூடிய விதத்தில் செயலாற்றுவதுதான் நமது கடமையாகும்.

இப்பொழுது ரூபவாகினி மூலம் நாள்தோறும் நமது மனதைக் கவரும் நிகழ்ச்சியொன்று காட்டப்படுகிறது. நாங்கள் சிறுவர்களாகப் பள்ளிசெல்லும் பருவத்தில் முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பில் எங்களுக்குச் சொல்லிக் கொடுத்த சின்னஞ் சிறிய கதை அது.

அது பின்வருமாறு :—

ஒரு ஊரிலே ஒரு பாட்டன் இருந்தார். அவருக்கு ஒரு பேரன் இருந்தான். ஒருநாள் அந்தப் பாட்டன் ஒரு மாங்கொட்டையை நாட்டினர். அப்போது அந்தப் பேரன் தாத்தா ஏன் இந்த மாங்கொட்டையை நாட்டுகிறீர்கள் என்று கேட்டான். அதற்குப் பாட்டன் இந்த மாங்கொட்டை முளைத்துப் பெரிய மரமாகி மாங்கனிகளைத் தரும். அதனுல்தான் இந்த மாங்கொட்டையை நாட்டுகின்றேன் என்ருர். அதற்குப் பேரன் பாட்டா நீங்கள் அதுவரை வாழமாட்டீர்கள் எனவே இதனுல் உங்களுக்கு என்ன பயன் ? என்று கேட்டான். அதற்குப் பாட்டன் குழந்தாய், எனக்காக நான் இந்த மாங்கொட்டையை நடவில்லை. நீ பெரியவனுகி வளர்ந்தபின் உனது பயன்பாட்டுக்காகத்தான் இதனை நாட்டுகின்றேன் என்று பதிலளித்தார்.

நமது கம்உதாவ நிகழ்ச்சித் திட்டமும் அத்தகைய நல்ல எண்ணத்தோடும் குறிக்கோளோடும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதென்பதை குறிப்பிட விரும்புகின்றேன். வருங் காலத்தில் எவர் பதவிக்கு வந்தாலும் நமக்குக் காரியமில்லை. இப் பணிகள் அனைத்தையும் நாங்கள் பொது நன்மைக்காகவே செய்து வருகின்ருேம். அத்தகைய நல்ல நோக்குடன் பணியாற்றும்போது தோல்விக்கு இடமில்லையென்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். முதல் மண்பிடியை வெட்டிய நாளன்று பிரதான அமைச்சர் பேர்ஸி சமரவீர அவர்கள் அப் பரோபகார சிந்தனையைப் பற்றி மிகவும் தெளிவாக எடுத்துக் கூறினர்கள். எனவே கம்உதாவ நிகழ்ச்சித் திட்டமானது சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் ஆர்வம் கொண்டவர்களுக்குத் துணையாகவும் பற்றுக்கோடாகவும் அமைந்துள்ளதென்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

சகோதர, சகோதரிகளே! எதிர்வரும் ஆறு ஆண்டுகளில் சில நோக்கங்களேயும் சில குறிக்கோள்களேயும் எய்தப் பெறுவதற்கு எண்ணியுள்ளோம். ஒன்று இந்த நாட்டின் சமாதானத்தை நிலைநாட்டுவதாகும். இரண்டாவதாக இந்த நாட்டில் ஒழுங்கினையும் கட்டுப்பாட்டினையும் ஏற்படுத்த வேண்டும். மூன்ருவதாக இந்த நாட்டை வளங்கொழிக்கும் நாடாக ஆக்க வேண்டும். ஆயுதங்களைக் கொண்டோ, அச்சுறுத்தல்களைக் கொண்டோ நாம் சமாதானத்தை ஏற்படுத்த நினைக்கமாட்டோம். அறிவுரை கோருதல், சமரச இணக்கம், கருத்தொருமைப்பாடு ஆகியவற்றின் மூலமே நாம் சமாதானத்தை ஏற்படுத்த எண்ணியுள்ளோம்.

இந்த எண்ணங்களை மதிக்காத சிலரும் இருக்கின்ருர்கள். ஆனல் நாங்கள் தைரியத்தை இழக்கக் கூடாது. இயன்றவரை முயன்று பார்க்கவேண்டும். எப்பொழுதுமே வன்முறையால் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது. நாங்கள் சமதாதானத்தை இன்று முன்வைத்துப் பேசிக் கொண்டிருக்கும் பொழுது சிறிதொரு கூட்டத்தினர் ஆயுதங்களை ஏந்தி ஆயுத பலத்தைப் பயன்படுத்திப்பேசிவருகின்ருர்கள் என்று உங்களுக்குத் தெரியும். அவர்கள் மக்களைக் கொன்று குவிக்கின்ருர்கள். பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த வீரர்களைக் கொலை செய்கின்ருர்கள். பொலிசாரைக் கொலை செய்கின்ருர்கள். அரசியல்வாதிகளைக் கொலை செய்கின்ருர்கள். ஏழை எளிய மக்களைக் கொலை செய்கின்ருர்கள். சிறு குழந்தைகளைக் கொலை செய்கின்ருர்கள். பயத்தினையும் பீதியினையும் ஏற்படுத்துகின்ருர்கள். இன்று பொதுச் சேவைகளைச் சீர்குலைத்துள்ளார்கள். இவைகள் அனைத்தும் நீதி நியாயத்தை பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்ட நடிவடிக்கைகளல்ல. ஆயுத பலத்தாலும் மரண அச்சுறுத்தல்களாலும் இன்று போக்கு வரத்து வசதிகளெல்லாம் இடைநிறுத்தப்பட்டுள்ளன வென்பது உங்களுக்குத் தெரியும். இச் சேவைகளில் வேலை செய்பவர்கள் மரண அச்சுறுத்தல் காரணமாகவே வேலைக்கு வராமலிருக்கின்ருர்கள் என்று எங்களுக்குத் தெரிவித்திருக்கின்ருர்கள். அவர்களுக்கு அநீதி யொன்றும் இழைக்கப்படவில்லையென்றும் அறிவித்திருக்கின்ருர்கள். ஏற்கனவே போக்குவரத்துச் சேவைகளைச் சேர்ந்த பல நூறு பேர்கள் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இன்று ஏனைய சேவைகளிலுள்ளவர்களுக்கும் அச்சுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்ஙனம் நாட்டிலுள்ள எல்லாச்

PRESIDENTIAL SECRETARIAT
LIBRARY

சேவைகளுக்கும் தடை விதிக்கப்படுமாயின் என்ன நடக்கப்போகிறது ? இவற்றுக்குத் தடை ஏற்படுத்துபவர்கள் அதன் காரணமாக மற்றவர்களுக்கு மாத்திரம் இடர்வேற்படுகிறதெனக் கருதலாம். அப்படியல்ல, அவர்களிடமும் தீய விழைவுகள் வந்து சேர்வது திண்ணம். நமக்கு இன்றியமையாத உணவு வகைகள், உடை வகைகள், பண்டங்கள் ஆகியவற்றைக் கொண்டுவரும் கப்பல்கள் நாள்தோறும் துறைமுகத்திற்கு வருகின்றன. இச் சரக்குகளை இறக்காதபடியால் அவற்றை வினியோகம் செய்யமுடியாது. அப் பண்டங்களைக் கொண்டுசெல்லத் தவறினால் நாட்டில் பல பகுதிகளுக்கு அவற்றை வினியோகம் செய்யமுடியாது. உணவுப் பொருள்கள், ஆடை அணிகள் ஆகியவற்றிற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால் அதனால் பாதிப்புறுபவர்கள் யார் ? ஒருவர் இருவர் மட்டுமன்றி எல்லோரும் பாதிப்புறுவார்கள். மரண அச்சுறுத்தல்களின் மூலம் இவற்றுக்குத் தடைவிதிப்பவர்களுக்கும் பாதிப்பு ஏற்படத்தான் செய்யும்.

பணியாளர்கள் தனது வேலைத் தலங்களுக்குச் செல்லத் தவறினால் அதன் விளைவு என்ன ? சம்பளம் பெறுபவர்களுக்கும் வேதனாதிகள் அற்றுப்போய்விடும். ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. அப்படியாயின் எல்லோருமே இதனால் பாதிப்புக்குள்ளாவர், இங்ஙனம் நினைத்துப் பார்க்கும்போது இந்த நாசகார வேலைகளில் ஈடுபாடு கொண்டுள்ளவர் அனைவருக்கும் இழப்பு ஏற்படுகின்றது. எனவே இது எவருக்குமே பயன்படாத முயற்சியாகும். நமது அரசாங்கத்தை நீங்கள் தெரிவு செய்துள்ளீர்கள். அதாவது ஜனாதிபதித் தேர்தல் மூலமும் பாராளுமன்றத் தேர்தல் மூலமும் இந்த அரசாங்கத்தை தெரிவு செய்துள்ளீர்கள். அந்த இரண்டு தேர்தல்களின்போது இன்று போன்று நமது பொதுமக்களுக்குப் பலவாறான இன்னல்களையும் அச்சுறுத்தல்களையும் செய்துவந்தார்கள். ஆயினும் வாக்காளப் பெருமக்கள் அஞ்சா நெஞ்சத்துடன் வாக்களிக்க முன் வந்தார்கள்.

இன்று பாருங்கள். இந்த கம்உதாவ ஆண்டு நிறைவு விழா ஆரம்பமாவதற்கு முன்னரே பயமுறுத்தல்களின் மூலமும், தடைகள் விதிப்பதன் மூலமும், போக்குவரத்தைச் சீர்குலைப்பதன் மூலமும் பதட்டநிலையினை ஏற்படுத்தினார்கள். ஆனால் பொதுமக்கள் அவற்றைப் பொருட்படுத்தாமல் தமது கடமைகளை நிறைவேற்ற முன்வந்தார்கள்.

இத்தகைய கடமை உணர்ச்சியோடுதான் கடந்த இரண்டு தேர்தல்களின் மூலம் தமது வாக்குரிமையை உபயோகித்து தமக்கு விருப்பமான ஆட்சியினைத் தேர்ந்தெடுத்தார்கள். அந்த ஆட்சியை மூன்று முக்கிய கோட்பாடுகளின் அடிப்படையில் அமைத்துக் கொண்டார்கள். அந்த மூன்று கோட்பாடுகளாவன, சமாதானத்தால் அமைதியை ஏற்படுத்த வேண்டும். முன்மாதிரியாக நடந்துகாட்டி ஒழுங்கை ஏற்படுத்த வேண்டும், உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் சுபீட்சத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதாகும். ஆயுத பலத்தைக் கொண்டு, துப்பாக்கி ரவைகள் கொண்டு சமாதானத்தை ஏற்படுத்த முடியாது. கலந்துரையாடல் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். யாவரினதும் கருத்தொருமைப்பாட்டினதும் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். முன்மாதிரியாக நடந்துகொண்டு ஒழுங்கினையும் கட்டுப்பாட்டினையும் ஏற்படுத்த வேண்டும். உற்பத்தி அதிகரிப்பதன் மூலம் சுபீட்சத்தை ஏற்படுத்த வேண்டும். வறுமையினை ஒழிக்க வேண்டும். அதுதான் நமக்கு மக்கள் கொடுத்துள்ள ஆணை. எனவேதான் ஜனநாயக செயல்முறையில் இது காறும் சேராமல் இருப்பவர்களை அச் செயல்முறைக்குள் வரவழைத்துக்கொள்வதற்கு நானும் எனது அரசாங்கமும் முயன்று வருகின்றோம்.

அன்று நிலவிய பாராளுமன்றத்தை விட இன்று நிலவும் பாராளுமன்றம் பல்வேறு அபிப்பிராயமுள்ளவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாண்மையாகத் திகழ்கின்றது. அதனையிட்டு எனது உள்ளம் பூரிக்கின்றது. நாம் அறிமுகப்படுத்திய மக்கள் விகிதாசார தேர்தல் முறையால்தான் இது சாத்தியமாயிற்று. ஒரு வேளை பழைய தேர்தல் முறை தொடர்ந்திருப்பின் இந்தப் பாராளுமன்றத்திலும் எனக்கு அல்லது நமது கட்சிக்கு மீண்டும் 5/6 க்கு மேலான உறுப்பினர் உரிமை கிடைத்திருக்கும். அது மகிழ்வூட்டும் செய்தியாகவிருப்பினும் எந்த விதத்திலும் நமக்கு மனத்திருப்தி ஏற்படுவதொன்றல்ல. அத்தகைய சூழலிலே ஒரு பக்கம் சாய்ந்த பாராளுமன்றம் உருவாகுமெனக் குற்றம் சாட்ட இடமுண்டு. சனாதிபதி தேர்தலின்போது பொதுமக்கள் எனக்கு வழங்கிய ஆணை எத்தகையவென்பது உங்களுக்குத் தெரியும். அதனைப் போன்று பாராளுமன்றத் தேர்தலின்போது இந்நாட்டு மக்கள் வியத்தகு முறையில் வாக்களித்துள்ளார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். எங்களுக்குக் கிடைத்த வெற்றி அபார வெற்றியாகும். ஆனால் நமது

RESIDENTIAL SECRETARIAT
LIBRARY

அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசார தேர்தல் முறை காரணமாகப் பாராளுமன்றம் பக்கம் சாயவில்லை. பல்வேறு அபிப்பிராய பேதங்களைக் கொண்ட, பல்வேறு அரசியற் கோட்பாடுகளைத் தழுவும், பல்வேறு மக்கள் இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற மொன்று இன்று எமக்கு வாய்த்துள்ளது. அதனைக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். 2/3 அங்கத்துவம் கொண்ட அரசாங்கக் கட்சி இல்லாதவிடத்தும் இத்தகைய பாராளுமன்றம் அமைந்திருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். எனவேதான் இதுகாறும் ஜனநாயக் செயல்முறையில் சேராதவர்களையும் ஜனநாயக நெறிமுறைக்குள் சேர்த்துக் கொள்வதற்கு நான் ஆவன செய்துவருகின்றேன். எனவேதான் அனைவருக்கும் நான் இப்பணிவான் வேண்டுகோளினை விடுக்கின்றேன்.

என்றுவது இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதற்கு முன்வரமாட்டார்களென எவருமே எதிர்பார்க்காத தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் இன்று எங்களுடன் கலந்துரையாடும் வகையில் ஓர் இணக்கத்திற்கு வரமுடிந்தமை உங்களுக்கு மகிழ்ச்சி தரும் விடயமெனக் கருதுகின்றேன். அதனை நாங்கள் சாதித்தது எங்ஙனம் ? துப்பாக்கி வளத்தால் அல்ல. குண்டு வீசுவதால் அல்ல. காடைத்தனத்தால் அல்ல. வெறும் பேச்சுக்களால் அல்ல. வசைபாடுவதனுல் அல்ல. சத்தியத்தினதும் நியாயத்தினதும் அடிப்படையில் கள்ளங்கபடமற்ற முறையில் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டுதான் அதனைச் சாதித்துள்ளோம். தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது யாது ? விடுதலைப் புலிகள் சக்திமிக்க போராளிக் குழுவாகும். வடக்கிலும் கிழக்கிலும் மட்டுமன்றி தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு உலகில் எல்லா நாடுகளிலும் அமைப்புக்கள் இருக்கின்றன. இந்த அமைப்புக்களின் வாயிலாக அவர்களுக்கு நிதியுதவிகள் கிடைக்கின்றன. அவர்களுக்கு மிக நவீன ஆயுதங்களுண்டு. தன்னுயிரையும் தியாகம் செய்யும் போர் வீரர்களும் அவர்களுக்கு இருக்கின்றுர்கள். அவர்களை தோற்கடிப்பதற்கு எடுத்த பல முயற்சிகள் தோல்வியடைந்தன. ஆனுல் இன்று நமது அழைப்பினைச் செவிமடுத்து அவர்கள் பேச்சு வார்த்தைகளில் பங்கு பற்ற வந்திருக்கின்றுர்கள். அதுமட்டுமன்றி, இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகவோ, வடக்கு கிழக்குகளில் வாழும் அனைத்து இனங்களைச் சேர்ந்தவர் களுக்கெதிராகவோ சுருங்கக் கூறின் இலங்கை நாட்டின் எப்

பகுதியிலுள்ள மக்களுக்கு எதிராகவோ போர் நடவடிக்கைகளில் இறங்கமாட்டோமென தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் நாடறிய வாக்குறுதி அளித்துள்ளார்கள்.

எவ்வளவு பெரிய உயிர்ச் சேதம் ஏற்பட்டதென்பது உங்களுக்குத் தெரியும். கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் ஏற்பட்ட மாபெரும் உயிர்ச் சேதங்கள் பற்றி அறியாதவர்களில்லை. இன்று எங்களுடன் கலந்துரையாட வந்திருக்கின்றூர்கள். கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் பிரச்சினேகளைத் தீர்ப்பதற்கு எதிர்நோக்குகின்ரேம். அதன் வழியாக ஜனநாயகச் செயல் முறைக்கு நுழையவும் எதிர்பார்க்கின்ரேம். இது யாவருக்கும் மாபெரும் வெற்றியாகும். சற்று சிந்தித்துப் பாருங்கள் எவ்வளவு பணத்தை நாங்கள் வீணுக்கியுள்ளோம். எவ்வளவு உயிர்களை நாங்கள் பலி கொடுத்துள்ளோம். அந்த அவப்பேருன நிலை இன்று மாறுதல் அடைந்து வருகின்றது. எனவேதான் ஏனையோரும் ஜனநாயக முறையில் சேருவதனைக் காண நான் விழைகின்றேன். அவர்களையும் நிர்வாக முறையில் பங்காளிகளாக்கிப் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களாக்கி பொதுமக்களால் தெரிவு செய்யப்படும் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களின் பங்காளிகளாக்கி யாவரையும் எம்மோடு சேர்த்துக் கொள்ள ஆவன செய்ய விரும்புகின்றேன். யாவரினதும் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு இடமளிக்கப்படல் வேண்டும். நாம் கருத்து வேறுபாடுடையவர்களாக இருக்கலாம். ஆயினும் கலந்துரையாடலின் மூலம் இணக்கத்திற்கு வரமுடியும். ஆயுத பலத்தைக் கைவிட்டு அபிப்பிராய பலத்தைக் கொண்டு கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணலாம். அதற்கென எல்லா வாய்ப்புகளும் அளிக்கப்படுகின்றன. எனவே ஐக்கியக் தேசிய கட்சி சனுதிபதி வேட்பாளராக என்னைத் தேர்ந்தெடுத்தவுடனே நான் புதியதோர் திட்டத்தைச் சமர்ப்பித்தேன்.

அனுபவ வாயிலாக முதிர்ச்சி கண்டுள்ள பழைய ஐக்கிய தேசியக் கட்சியானது இன்று புதிய கொள்கைகளைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியாக உருமாறியுள்ளதென்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அப் புதிய கொள்கைத் திட்டங்களின் காரணமாகத்தான் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரும் எங்கள் மீது அசையாத நம்பிக்கை வைத்துள்ளனர். இன்று நமது கட்சி மிகப் புதிய கொள்கைத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது. இந்த நாசகாரச் செயல்களைக் கைவிட்டு யாவரும் தத்தமது கருத்துக்களை வெளிப்படுத்தி இந்நாட்டில் அப்பாவி

மக்களுக்கு ஆறுதல் அளிக்க முன்வர வேண்டுமென நான் கேட்டுக்கொள்வதன் தாற்பரியமும் அதுவேதான். அந்த நோக்கினைக் கொண்டுதான் நாங்கள் பாராளுமன்றத்தை உறுதிவாய்ந்த அமைப்பாக ஆக்கியுள்ளோம். யாவரினதும் கருத்து வேறுபாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் அறிவுரை கோருதலாலும், சமரச இணக்கத்துக்கு வருவதனாலும் கருத்தொருமைப்பாட்டினாலும் கொள்கைகளைத் தீர்க்கும் நோக்கத்தில் தான் பாராளுமன்றத்தை சக்திமிக்க அமைப்பாண்மையாக உருமாற்றியுள்ளோம்.

பெரும்பான்மையான பொறுப்புக்களைப் பாராளுமன்றத்திடம் ஒப்படைப்பேனென்று நான் தேர்தலுக்கு முன்னரே கூறிவந்தேன். அத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு ஏற்புடைய நிலையிற் கட்டளைகளை ஆக்கிக் கொள்ளும்படி ஏலவே சபாநாயகருக்குக் கூறியுள்ளேன். பாராளுமன்றம் என்பது மிகுந்த பொறுப்பு வாய்ந்த அமைப்பாண்மையாகும். எனவே வெளியிலிருந்து போராடுபவர்கள் அனைவரையும் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களாய் ஜனநாயக ஆட்சிமுறைக்கு அனைவரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். நான் எப்பொழுதும் என்னால் இயன்றவற்றையெல்லாம் செய்வதற்கு ஆயத்தமாயிருக்கின்றேன். கலந்துரையாடல் மூலமும் கருத்துப் பரிமாற்றத்தின் மூலமும் எத்தகைய பிணக்கினையும் தீர்த்துக் கொள்ளும் ஆற்றல் எமக்குண்டு. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நாங்கள் மேற்கொண்டுள்ள பேச்சு வார்த்தைகள் புதியதோர் அனுபவத்தை எமக்கு அளித்துள்ளது. இந்த மாபெரும் வெற்றியைச் சற்று உற்றுநோக்குங்கள். இதுவரை காலமும் நாங்கள் சண்டையிட்டுக் கொண்டோம். இரண்டு பக்கத்திலும் உயிர் இழந்தவர்கள் ஆயிரக் கணக்கானோர். அந்நிய நாட்டுப் படைகளை இங்கு கொணர்ந்து நமது படையினரை வாபஸ் பெற்றுக்கொண்டு இந்தக் கிளர்ச்சியைத் தடுப்பதற்கு நாங்கள் பலவாறு முயன்றோம். ஆனால் தோல்வி கண்டோம். கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் திட்டமே இறுதியில் வெற்றி காண்பது.

எனவே தான் மக்களுக்கு இன்னல் பல கொடுக்கும் திட்டமொன்றை நிறைவேற்றுவதற்கு முன்னர் அவர்கள் சொல்வதனைச் செவிமடுக்குமாறு இடையறாது கூறிவருகின்றேன். தேவையானவற்றைப் பற்றிக் கலந்தாலோசிக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். இந்த நாடானது

அனைவருக்கும் சொந்தமான நாடாகும். இந்தப் பிரச்சினைகள் யாவரையும் பிணைக்கும்பான்மை கொண்டவை. நிறுத்தங்கள் ஏற்படும் போது, குறைபாடுகள் ஏற்படும்போது, இன்னல்கள் ஏற்படும்போது நாட்டில் உள்ள அனைவருக்கும் அவற்றினால் வரும் பலாபலன்களை அனுபவிக்க நேரிடும்.

...

நாங்கள் முன்வைத்திருந்த வேலைத் திட்டத்தின் மீது மக்கள் கொண்டிருந்த அபார நம்பிக்கையின் காரணமாகக் கடந்த இரு தேர்தல்களின் போதும் பல இன்னல்களுக்கிடையில் வாக்காளப் பெருமக்கள் நம்மை ஆதரித்து வாக்களித்துள்ளார்கள். அதே நம்பிக்கை தான் இந்த கம்உதாவ ஆண்டு நிறைவு விழாவின் போது காணக் கூடியதாகவிருக்கின்றது. இந்த பத்து அல்ல பதினொரு நாட்களுக்குள் 19 அல்லது 20 இலட்சம் பேர்கள் இந்தக் கண்காட்சியைக் காண்பதற்குத் திரண்டு வந்தார்கள். பகல் 2 மணி முதல் இரவு 12 மணிவரை இலட்சக் கணக்கானவர்கள் ரூபா ஐந்து கட்டணத்தைக் கொடுத்து அனுமதிச் சீட்டுக்களை வாங்கி எங்களை ஆதரித்ததன் காரணம் எங்கள் திட்டங்களின் மீது அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையாகும். போக்குவரத்து வசதிகள் சீர்குலைந்த உடனேயே கம்உதாவ ஆண்டு நிறைவு விழாவுக்குச் சாவுமணி அடிக்குமெனப் பலர் கருதி வந்தார்கள். அதே போன்று மகியங்கனை நகரமானது பாழடைந்து விடுமென்றும் சிலர் கருதினார்கள். கிராமங்கள் தோறும் சென்று கொலை செய்வதாக அச்சுறுத்துவதன் மூலம் கம்உதாவ பொருட் காட்சியானது பாலைவனமாக மாறிவிடுமென்றும் சிலர் கருதினார்கள். ஆனால் அவர்கள் கட்டிய மனக்கோட்டைகள் குட்டிச் சுவராகியுள்ளதை நீங்கள் இன்று கண்டு கொள்ளலாம். மக்கள் அபிப்பிராயம் என்னவென்பதையும் நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

அதனைப் போன்ற சிறப்புமிக்கதோர் அரசியல் அமைப்பு எங்களுக்கு இருக்கிறது. அந்த அரசியல் அமைப்பின்படி பொதுமக்களுக்கு மூன்று வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. பெரும்பான்மையான வாக்குகளின் மூலம் நிறைவேற்றப்பெற்று செயற்படுத்தப்படக்கூடிய விடயங்களுண்டு. 2/3 வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பெற்றுச் செயற்படுத்தப் படக்கூடிய விடயங்களும்முண்டு. பெரும்பான்மை வாக்குகளின் மூலம் அல்லது 2/3 வாக்குகள் மூலம் நிறைவேற்றப்பட முடியாத கொள்கைகள் மக்கள் வாக்கெடுப்பொன்றின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்காக விசேட ஏற்பாடுகளுமுண்டு. அவ் விசேட ஏற்பாடுகளின் பாற்படுவன

யாவை ? இந்த நாட்டின் இறைமை, இந்த நாட்டின் ஒற்றையாட்சி, இந்த நாட்டின் ஆட்புலஒருமை என்பனவாகும். இந்த மூன்றும் பற்றிய மாற்றங்கள் அறிமுகப்படுத்தும் போது அந்த மாற்றங்கள் மக்கள் தீர்ப்புக்கு விடப்படல் வேண்டும்.

இந்த நாட்டின் இறைமையினையும், ஒற்றையாட்சி உடமையினையும், ஆட்புலஒருமையினையும் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை வாக்குகளின் மூலம் அல்லது 2/3 வாக்குகளின் மூலம் இல்லாதொழிக்க முடியாது. அத்தகைய திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு மக்கள் தீர்ப்புக்கு விடல் வேண்டும். இந்த நாட்டின் இறைமையினையும், ஒற்றையாட்சியுடமையையும் ஆட்புலஒருமையினையும் மாற்றுவதற்கு பொதுமக்களுக்கு மட்டுமே தத்துவம் இருக்கிறது. இந்த நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கோ இந்த நாட்டினுள்ளே புறம்பான அரசுகளை ஏற்படுத்தவோ பெரும்பான்மை வாக்கு மூலம் செய்யமுடியாது. அதே போன்று 2/3 வாக்குகளாலும் செய்யமுடியாது. அவ்வாறு செய்ய வேண்டுமிடத்து மக்களது தீர்ப்பினை நாடல் வேண்டும். அத்தகைய பிரயோக முறைக்குட்பட்ட அரசியல் அமைப்பொன்று எங்களுக்கு இருக்கின்றது. எனவே எவரோடும் எந்த விடயம் பற்றியும் கலந்தாலோசிப்பதற்கு இடமளிக்கும் அதிசக்தி வாய்ந்த அரசியலமைப் பொன்று எங்களுக்கு இருக்கிறது. எனவேதான் நான் எவரோடும் எவ்விடயம் பற்றி கலந்தாலோசிப்பதாயினும் அப்பேச்சு வார்த்தைகளின் மூலம் எடுக்கப்படும் எத்தகைய தீர்மானமும் நமது அரசியலமைப்புக்கு ஏற்புடையதாதல் வேண்டுமெனக் கூற விரும்புகின்றேன்.

எனவே எவரோடும் கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் எத்தகைய வேலைத் திட்டத்தினையும் தயாரித்துக் கொள்ளும் அதிகாரம் எங்களுக்குண்டு. எமக்கு இறைமை இருக்கிறது. நம் நாடு சுதந்திர நாடாகும். நாங்கள் யாருடன் கலந்துரையாடவேண்டுமென்பது பற்றியும், பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ள வேண்டியவை யாவை என்பது பற்றியும், எந்த நிபந்தனைகளின் பேரில் அப்பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது பற்றியும், எங்களுக்கு பணிப்புரைகளை வழங்கும் அதிகாரம் உலகில் எந்த நாட்டுக்கும் எந்த அரசாங்கத்திற்கும் இல்லையென்பதை ஆணித்தரமாகக் கூற விரும்புகின்றேன். அந்த இறைமை இந்நாட்டு மக்கள் கையில்தான் உண்டு. அந்த இறைமையை எவ்விடத்திலாயினும் பிறிதொரு நாடு

அல்லது பிறிதொரு அரசாங்கம் பகிர்ந்து கொள்ளமுடியாது. அது முற்றுமுழுதாக இலங்கை மக்களுக்குச் சொந்தமான உரிமையென்பது நாங்கள் அனைவரும் அறிந்த விடயமாகும்.

கடந்த 3, 4 மாதங்களில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இயன்றவாறெல்லாம் நாங்கள் ஆவன செய்து வந்துள்ளோம் என்பது உங்களுக்குத் தெரியும். அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது. தடுப்புக் காவலில் இருந்தவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இவை அனைத்தையும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குத்தான் செய்து வந்தோம். ஆனால் சமாதானத்திற்காக அவர்கள் கொடுத்த பதில் — கொடுக்கின்ற பதில் — நாசகாரச் செயல்களாக அமையும்போது பெரும்பான்மையான மக்களின் பாதுகாப்புக் கருதிச் செயல்பட வேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம். அதன் காரணமாகத்தான் மீண்டும் அவசரகாலச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர நேர்ந்தது. அதனைப் போன்று, ஒழுங்கினையும் கட்டுப்பாட்டினையும் ஏற்படுத்துவதற்கான முன்மாதிரியான சட்டதிட்டங்களும் ஏற்கனவே பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அமுலாக்கப்பட்டு வருகின்றன. நமது ஆட்சிமுறை பூரணமாக மீளமைக்கப் பெற்று வருகிறது. ஏனைய திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் பரிபூரண மீளமைப்பொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் பல மாற்றங்கள் புகுத்தப்பட வேண்டியுள்ளன. நிறுவனங்கள் பற்றிய மாற்றங்கள், ஆட்கள் பற்றிய மாற்றங்கள் அனுபவ ரீதியாக அமைத்துக்கொள்ள வேண்டியிருக்கின்றன. இத் தேர்தலின்போது நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முற்றுமுழுதான மீளமைப்பொன்றை ஏற்படுத்தக் கருதியுள்ளோம் என தேர்தலுக்கு முன்னரே நாங்கள் வெளிப்படுத்தி வந்தோம். அதன் வண்ணம் மாபெரும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்தகைய மாற்றங்களை மேற்கொள்ளும்போது பலரிடையில் பல விதமான மனக்கசப்புகள் ஏற்படலாம். தனிப்பட்ட ஒருவரின் மனக்கசப்புகளை அகற்றும் பொருட்டு, பொதுமக்களது நலனைப் பறிகொடுக்க இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருப்பதில்லை என்பதை நான் கூற விரும்புகின்றேன். பொது நன்மைக்காகவும் பலருடைய நேர்மைக்காகவும் அத்தகைய மாற்றங்களைப் புகுத்த நாம் தயங்க மாட்டோம்.

இற்றைக்கு ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்னர் சோவியத் நாட்டின் தலைவர் ஆன சோவியத் நாட்டு சனாதிபதி நிகாயில் கொர்பச்சேவ்

அவர்கள் பீரஸ்தொரய்க்கா எனப் பெயரிய மீளமைப்புத் திட்டமொன்றை விளக்கிக் கூறுவதற்கு நூல் ஒன்றை எழுதினுர். அந்த நூலை வாசிப்பவர் உள்ளத்தில் விசேட ரசனை ஏற்படுகின்றது. அவர்கள் பூரண மீளமைப்பொன்றைச் செயற்படுத்தப் போவதாக அந்த நூலில் குறிப்பிட்டுள்ளார். அந்த நூல் பற்றி முதன்முதலாக விமர்சித்தவன் நானே. சோவியத் நாட்டிற்கு ஏற்புடைய மீளமைப்பொன்றைத்தான் அவர்கள் செய்துள்ளார்கள். இன்று அந்த மீளமைப்பானது பல இன்னல்களுக்கு மத்தியில் அமுலாக்கப் பெற்று வருகிறது. சில நாட்களுக்கு முன்னர் அந்த நாட்டில் மக்கள் இனங்கள் அவருடைய திட்டங்களை முறியடிப்பதற்காகப் பல குழப்பங்களைச் செய்து வருகின்ருர்கள் என்று நான் வானெலி மூலம் அறிந்து கொண்டேன். அவருடைய வேலைத் திட்டங்களை முறியடிப்பதற்கு அந்நாட்டு மக்கள் முன்வந்திருப்பது வியத்தகு விடயமன்று. அதே போன்று நம்நாட்டிலும் மாபெரும் மீளமைப்பொன்று அமுலாக்கப்படும் இந்த வேளையில் பல்வேறு தோற்றங்களில் தடைகள் தலைகாண்பது விந்தைக்குரியதன்று. கொள்கை ரீதியாகவும் அமுலாக்க ரீதியாகவும் ஐக்கிய தேசியக் கட்சி அறிமுகப்படுத்தியுள்ள மீளமைப்புகள் அமுலாக்கப்படும் இந்த நேரத்தில் பல் வித தடைகள் ஏற்படலாம். அதுமட்டுமன்றி இந்நாட்டு இறைமையினையும், சுதந்திரத்தினையும், ஆட்புலஒருமையினையும், ஒற்றையாட்சியினையும் பாதுகாக்கும் பொருட்டு நீங்கள் எங்களுக்கு வழங்கிய ஆணையின்படி நடவடிக்கையெடுக்கும் போது நமது நாட்டை தமது கொத்தடிமைக்குள் கொண்டுவரக் கருதியவர்கள் பலவிதமான கண்ணிகளில் எங்களைப் பிணைத்துக் கொள்ள முயலலாம்.

பண்டைய காலங்களில் ஒரு நாட்டை தமக்கு அடிமையாக்கிக் கொள்வதற்கு மரபு வழிப்பட்ட யுத்தத்தில் இறங்குவது வழக்கம். இன்று அந்த வழிமுறை மாறுதல் அடைந்திருக்கின்றது. ஒரு நாட்டைப் பணிய வைப்பதற்கு, அடிமைப்படுத்திக் கொள்வதற்கு தேவையேற்படும் போதெல்லாம் வேறு திறமுறைகளைப் பயன்படுத்தும் காலமே இது.

துப்பறியும் ஒற்றர் சேவைகள் இன்று உள்ளன. அந்த ஒற்றர் சேவைகளின் முகவர்கள் அந்தந்த நாடுகளுக்கு அனுப்பப்படுவார்கள். அந்தந்த் நாடுகளில் உள்ளவர்கள் பலரையும் பிடித்துக்கொள்வார்கள். பல வித சலுகைகளை வழங்கித் தமக்குச் சாதகமாக அந்நாடு அமையும் பொருட்டு உட்பூசல்களை கிளறிவிடுவதற்காக இலஞ்சம் கொடுத்து

விடுவார்கள். சுலோகங்களை கோசித்தவண்ணம் படுகொலை செய்கிறார்கள். இடர்கள் பலவற்றைச் செய்து வருகின்றார்கள். நாட்டின் ஆட்சி முறையினை முறியடிப்பதற்கு அந்த ஆட்சி முறைக்குள்ளேயே இயங்கும் கூலி வேலை செய்பவர்களைத் தேடிக் கொள்வார்கள். அந்தக் கூலியாட்களின் உதவியைக் கொண்டு அந்த ஆட்சி முறையினை உள்ளூற அளிக்கச்செய்யும் தீய சக்திகள் இங்கு உள்ளன. பண்டைய காலங்களில் கன்னம் வைக்கும்போது கள்வர்கள் அந்த வீட்டிலுள்ளவர்கள் நித்திரையில் ஆழ்ந்திருந்தபோது வீடுடைப்பது வழக்கமாயிருந்தது. பின் ஒரு காலத்தில் அக் கள்வர்கள் புதிய திறமுறைகளைக் கண்டு பிடித்தார்கள். வீட்டிலுள்ள வேலைக்காரி அல்லது வேலைக்காரனை லஞ்சத்தின் மூலம் பிடித்துக்கொண்டு இரவு நேரங்களில் கதவுகளை அடைக்கும்போது சரியாக தாழ்ப்பார் போடாமல் இருக்கும்போது கள்வர்கள் எளிதில் வீட்டுக்குள் நுளைந்து பொருட்களைக் கவர்ந்து செல்வார்கள். அந்த வேலைக்காரியை அல்லது வேலைக்காரனைச் சாட்டாக ஒரு மரத்தில் கட்டிவைத்துப் போவார்கள். களவாடிய பொருட்களில் சரிபாதியை வேலைக்காரிக்கு அல்லது வேலைக்காரனுக்குக் கொடுப்பார்கள். வீட்டுச் சுவரில் கன்னம் வைத்து அதனூடாக வீட்டில் நுளைந்த கள்வர்கள் பின் ஒரு காலத்தில் வீட்டிலேயே வசிக்கும் ஒருவரின் உதவியைப் பெற்றுக்கொண்டார்கள். ஆதலால் இன்றைய உலகில் பிற நாடுகளை அடிமையாக்கிக் கொள்வதற்குப் புத்தம் புதிய உத்திகளைக் கையாளுவது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

நாட்டுக்குள்ளேயே குழப்பநிலை இருக்குமாயின் அந்த குழப்பங்களிற்கு ஆளானவர்களையே பிடித்துக்கொண்டு அவர்களிற்கு லஞ்சம் கொடுத்து விட்டு அவர்களிற்கு பல விதமான வசதிகளை வழங்கிவிட்டு அவர்களையே பயன்படுத்தி உள்நாட்டிலேயே கிளர்ச்சிகளை ஏற்படுத்துவது சுலபமாகும். வடக்கிலும் கிழக்கிலும் என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். நமது நாட்டிற்கு எதிராக நம்மவர்களைக் கொண்டே போராடுவதற்கு உதவி புரிந்தவர்கள் யாரென்பதும் உங்களுக்குத் தெரியும். எங்களுக்கு ஆயுதங்களை வழங்கினார்கள், எங்களுக்கு தஞ்சம் அளித்தார்கள், எங்களுக்குப் பணவுதவி வழங்கினார்கள் என்று அவர்களே இப்பொழுது கூறிவருகின்றார்கள். எனவே இத்தகைய புத்தம் புதிய நுண்ணிய உத்திகள் இருக்கின்றன என்பதை நாங்கள் மறந்துவிடக் கூடாது. சின்னஞ் சிறிய அபிப்பிராய பேதங்களைப் பயன்படுத்திக் கொண்டு துப்பறியும் சேவைகளின் மூலமாக

PRESIDENTIAL SECRETARIAT
LIBRARY

நமது நாட்டுக்குள்ளேயே பதட்டநிலையை ஏற்படுத்துவதற்கு முயல்கிறார்கள். நமது நாடுகள் விசேடமாக மூன்றாவது உலக நாடுகள் வலிமை பெற்ற நாடுகளாக நிமிர்ந்து நிற்பதை சகிக்காத பலர் அத்தகைய செயல்களில் ஈடுபாடு கொள்ளலாம். இவைகளைப் பற்றி நாங்கள் விழிப்புடன் இருத்தல் வேண்டும். எனவேதான் நமது ஒழுங்கினையும் கட்டுப்பாட்டினையும் பேணுதல் அவசியமாகும். நமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ள முயல வேண்டும்.

சற்று முன்னர் சபாநாயகர் அவர்கள் ஆற்றிய உரையினை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அவர் கூறியவற்றை நான் ஏற்றுக் கொள்கின்றேன். அபிப்பிராய பேதங்கள் இருப்பின் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு ஆலோசனை செய்து ஏற்புடைய முடிவுகளுக்கு வர ஆவன செய்யவேண்டும். இல்லாவிடில் அந்நிய நாட்டு எதிரிகள் எங்களை மீண்டும் அடிமைப்படுத்திக் கொள்ள முன்வரலாம். நானூறு ஆண்டுகள் வரை இந்த நாடு அடிமை நாடாக இருந்தது. ஆதலால் நம்மிடையில் நிலவும் பிரச்சினைகளை நாமே ஆய்ந்து பார்த்து இணக்கத்துக்கு வரல் வேண்டும். எனவேதான் கலந்துரையாடல் மூலமும் கருத்துப் பரிமாற்றத்தின் மூலமும் நமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண்போமென நான் பலமுறை வேண்டுதல்களைச் செய்து வருகின்றேன். நாம் மனம் வைத்தால் எந்தச் சேவையினையும் நல்ல நிலைக்குக் கொண்டு வரலாம். சத்தியத்தின் அடிப்படையில் நீதி நியாயத்தின் அடிப்படையில் எப்பொழுதுமே பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நான் தயாராக உள்ளேன் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். அதனைக் கொடுக்க முடியாது, இதனைக் கொடுக்க முடியாதெனக் கூறும் இறுமாப்பு எனது அரசாங்கத் துக்கு இல்லையென்பதையும் கூற விரும்புகின்றேன். நமது கட்சி மிகவும் பணிவடக்கம் உடையது. உண்மையென்னவென்பதைக் கண்டு பிடிப்பதற்கும் நீதி நியாயம் என்னவென்பதைக் கண்டுபிடிப்பதற்கும் தான் நாங்கள் முயன்று வருகின்றோம். அந்தக் கொள்கையின் அடிப்படையிலே நாட்டின் சமாதானம், ஒழுங்கு, சுபீட்சம் ஆகியவற்றுக்காக எதனையும் செய்ய எனது அரசாங்கம் தயாராகியுள்ளது.

கடந்த நான்கு அல்லது ஐந்து மாதங்களில் இந்த நாட்டின் சுபீட்சத்திற்காக நாங்கள் அறிமுகப்படுத்திய வேலைத் திட்டங்கள் ஏராளம். நமது பாடசாலை மாணவ மாணவிகளுக்கு பகல் உணவு வழங்கும் பொருட்டு வருடமொன்றுக்கு 2,000 மில்லியன் ரூபா தயக்கமின்றியே ஒதுக்கியுள்ளோம். சற்று யோசித்துப் பாருங்கள். அது

நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட சலுகையில்லையா ? பெற்றோர்களுக்கு அது சம்பளவுயர்வாக அமையவில்லையா ? சிந்தித்துப் பாருங்கள். அது செலவினத்தைக் குறைக்கவில்லையா ? இன்று சனசக்தி நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இரண்டு ஆண்டு களுக்குள் எழுபது லட்சம் மக்கள் சக்தியூட்டப்பட்டப் போகின்றனர். அதன் நோக்கம் வறுமையினை ஒழித்து உற்பத்தியை அதிகரிப்பதாகும். உற்பத்திகள் குறைந்திருப்பதனால் சம்பளத்தை நம்பி வாழ்பவர்களின் சம்பளம் இன்று போதாத நிலையிலிருக்கின்றது. உற்பத்திகளை அதிகரிக்க முடியுமானால் குறிப்பாக உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்க முடியுமானால் இப்பொழுது கிடைத்துவரும் சம்பளமும் போதியதாக அமையும். அந்தப் பொருளாதார முரண்பாட்டை ஒழிப்பதற்குத் தான் சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுலாக்கி வருகின்றோம். இன்னொரு காரணம் இருக்கின்றது. கடந்த காலத்தில் ஏற்பட்ட இனக் கலவரங்கள் காரணங் களாகவும் பல்வேறு போராளிக் குழுக்களின் செயல்கள் காரணமாகவும், நம் நாட்டின் பல பகுதிகளையும் பல கட்டிடங்களையும் மீண்டும் அமைப்பதற்குரிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது. இவற்றைச் செய்து முடிப்பதற்கு ஏராளமான பணம் தேவைப்படுகிறது. அத் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டவுடனே பல்லாயிரக் கணக்கானவர் களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். நமது நட்புறவு நாடுகள் நமக்கு பெருந்தொகையான பணத்தை வாரிவழங்கியிருக்கின்றார்கள். சகோதர, சகோதரிகளே, அப்பணத்தை நாங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பணத்தைப் பயன்படுத்திக் கொள்ள நாட்டில் சமாதானம் நிலவ வேண்டும். படுகொலைகள் செய்யுமிடத்து ஆதனங்கள் தீக்கிரை யாகுமிடத்து, துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமிடத்து ஆட்சி முறையினை சீர்குலைக்குமிடத்து நாங்கள் இந்தப் பணத்தைப் பயன்படுத்தி வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த முடியுமா ? நாட்டின் மறுசீரமைப்புப் பணிகளுக்கும் புனர்வாழ்வு அளிக்கும் பணிகளுக்கும் திட்டங்கள் பல தீட்டப்பட்டுள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. போக்குவரத்துச் சேவைகள் சீரழிந்து போகுமிடத்து மின்சாரம் தடைப்படுமிடத்து, உயிர்க் கொலை பண்ணுமிடத்து பொதுமக்கள் பீதியுற்று இருக்குமிடத்து அந்த மாகாணங்களில் பணத்தைச் செலவழித்து அபிவிருத்தியை எங்ஙனம் ஏற்படுத்த முடியுமென்பதை யோசித்துப் பாருங்கள். ஆகையால் நாட்டுப்பற்று உள்ளவர்கள் இந்த நாட்டு மக்களுக்கு விடுதலையை வென்றெடுப்பதில்

அக்கறை உள்ளவர்களாயின் தயவுசெய்து இந்த வன்முறைகளையும் தீவிர செயல்களையும் கைவிடுமாறு நான் இத்தருணத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

1980 ஆண்டு யூலை மாதத்தில் எதிர்பாராதவாறு வேலை நிறுத்தம் செய்தார்கள். அந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்கு நமது அரசாங்கம் பல வருடங்களாகப் பல்வேறு சலுகைகளை வழங்கி வந்தது. கடைசியாக வேலையற்றிருந்த ஆண்டுகளில் இடையருது சேவை புரிந்தவர்களாகக் கருதி அவர்களுக்கு ஒய்வூதிய நலன்களை வழங்குவதற்கு நான் ஆவன செய்தேன். இப்பொழுது மீண்டும் வேலைநிறுத்தம் செய்துள்ளார்கள். இப்பொழுது மரண அச்சுறுத்தல் இருக்கின்றபடியால் வேலைக்கு வரமுடியாது என்று கூறி வருகின்ருர்கள். எனவே சகோதர, சகோதரிகளே, நான் உங்கள் முன்னிலையில் இந்த விடயங்களைச் சமர்ப்பிப்பது நன்று எனக் கருதினேன். விசேடமாக கம்உதாவ ஆண்டு நிறைவு விழாவிற்கு வருகைதந்து எங்களை, நீங்கள் ஆதரித்தமையை கருத்திற் கொள்ளுமிடத்து உங்களைப் போன்ற பண்பான மக்கள், அஞ்சா நெஞ்சம் கொண்ட மக்கள், தன் உயிரிலும் மேலாக நீதிக்குத் தலை வணங்கும் மக்கள் இந்த நாட்டின் குடிமக்களாக இருப்பதில் நாம் பெருமைப்பட வேண்டிய விடயமாகும். எனவே எல்லா மக்களினங்களோடும் எந்த விடயம் பற்றியும் கலந்தாலோசிக்க ஆவல் கொண்டுள்ளேன்.

நமது கலந்துரையாடல்கள் எந்த அடிப்படையில் அமையவேண்டும் என்பதையும் அக்கலந்துரையாடல்களின் பொருள் விடயங்களாக அமையவேண்டியவை யாவை என்பதையும் எம்மைத் தட்டிக் கேட்பதற்கு அல்லது எங்களை வற்புறுத்துவதற்கான அதிகாரம் உலகில் எந்தச் சக்திக்கும் இல்லை. அந்த உரிமை நமது அரசாங்கத்திற்கே உரியது. நம் நாட்டுச் சுதந்திரத்திற்கும் இறைமைக்கும் ஆட்புல ஒருமைக்கும் ஒற்றையாட்சி நிலைக்கும் ஏற்புடைய வாருன தீர்ப்புகளைக் காணும்பொறுப்பு நமது அரசாங்கத்தின் பாற்படும் விடயமாகும். எனவே நாங்கள் எவரோடு பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டாலும் எந்த விதமான தீர்வுகளை முன்வைத்தாலும் அவைகள் யாவும் சம்பந்தப்பட்ட யாவரிடமும் கலந்தாலோசித்தே செய்யப்படுவனவாகும். அத்துடன் எல்லா மக்களினங்களுடனும், எல்லா அரசியற் கட்சிகளோடும் கலந்தாலோசித்தும் செய்யப்படுவனவாகும். அவ்வாறு முன்வைக்கப்படும்

தீர்மானங்கள் எல்லாம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க நிறைவேற்றப்பட்ட பின்னரே அமுலாக்கப்படும். அறிவுரை கோருவதன் மூலமும் சமரச இணக்கத்திற்கு வருவதன் மூலமும் கருத்தொருமைப்பாட்டின் மூலமும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது நாம் கடைப்பிடிக்கும் செயல் முறையாகும். அந்தச் செயல்முறைக்கு ஆதரவு அளித்து இந்த விழாவினைச் சிறப்பித்தமைக்கு உங்கள் அனைவருக்கும் சிரந்தாழ்த்தி விடைபெற்றுக் கொள்கிறேன்.

ජනාධිපති ලේකම් කාර්යාලය
26 AUG 2023
පුස්තකාලය

